வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office
SAGARMALA
PORT-LED PROSPERITY

**Press release:25** **Date:15.10.2018**

## V.O. Chidambaranar Port creates history by handling Ship with 14 metre draft

Today on 15.10.2018, V.O. Chidambaranar Port, for the first time in Port's history handled a vessel with 14 metre draft. The vessel 'MV Zheng Jun' was docked at the North Cargo Berth-I at 1600 Hrs. The Panama flagged vessel 'MV Zheng Jun' with Length of 229 metres and beam of 32.26 metres arrived from the Port of Samarinda, Indonesia with 74,962 Tonnes of coal for Neyveli Thermal Power Limited (NTPL).The agents for the vessel is GAC Shipping (India), Pvt. Ltd., Tuticorin.

CaptJ. Kingston Neel Durai, Pilot and CaptN. Venkatesh, Pilot under the guidance of CaptBhabatosh Chand, Deputy Conservator effectively guided the ship safely to the berth.

Earlier on 20.06.2018, the Port had handled MV Dionysus, a vessel with draft of 13.20 metre, that discharged 60,500 Tonnes of Rock Phosphate for Greenstar Fertilizers Limited, Tuticorin.

Shri Rinkesh Roy, Chairman, V.O. Chidambaranar Port thanked the entire team which brought the first vessel with 14 metre draft to the Port and stated that, 'With the developmental projects on the horizon, this record-size vessel calling the Port will be a game changer to the Port to handle more cargo and the trade to reap the benefit of 'Economics of Scale' in handling Coal, Lime Stone, Rock Phosphate and other Bulk cargo'.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

**Public Relations Officer**

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
ISO9001:2015, ISO 14001 : 2015, OHSAS 18001:2007 & ISPS Compliant Port
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

பத்திரிக்கைசெய்திஎண் :25 தேதி : 15.10.2018

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 14 மீட்டர் மிதவைஆழம் கொண்டபெரியகப்பல் கையாண்டுபுதியசாதனைபடைத்துள்ளது.**

இன்று 15.10.2018 வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் முதன் முறையாக 14 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட பெரிய கப்பல் கையாண்டு புதிய சாதனை படைத்தது. எம்.வி. ஜேன் ஜீன் (M.V. Zheng Jun)என்ற கப்பல் வடக்கு சரக்குதளம்-1 இன்று மாலை 4.00 மணியளவில் வந்தடைந்தது. பனாமக்ஸ் நாட்டின் எம்.வி. ஜேன் ஜீன் (M.V. Zheng Jun)229மீட்டர் நீளமும் 32.26மீட்டர் அகலமுடையது. இக்கப்பல் இந்தோனேஷியாவிலுள்ள சமாரிண்டா என்ற துறைமுகத்திலிருந்து 74,962 டன் நிலக்கரியை நெய்வேலி அனல்மின் நிலையத்திற்கு எடுத்து வந்துள்ளது. அக்கப்பலின் முகவர்கள் GAC ஷிப்பிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் ஆவர்.

கேப்டன் ஜெ. கிங்ஸ்டன் நீல் துறை, மாலுமி மற்றும் கேப்டன் என். வெங்கடேஸ்,மாலுமி, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்பு கழகம் அவர்கள் கேப்டன் பபோடோஸ்சந்த், துணைபாதுகாவலர் அவர்களின் ஆலோசனையின் படி இப்பெரிய கப்பலை வடக்கு சரக்குகப்பல் தளத்தில் பாதுகாப்பாக கொண்டு வந்து சேர்த்தனர்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இதற்கு முன்பு 20.06.2018 அன்று கீரின்ஸ்டார் உரம் லிமிடெட், தூத்துக்குடி என்ற தொழிற்சாலைக்கு 60,500 டன் ராக் பாஸ்பேட் சரக்கினை13.20 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட எம்.வி. டயோனியஸ் என்ற கப்பலை கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திரு. ரிங்கேஷ் ராய், இந்திய இரயில் போக்குவரத்து பணி, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் அவர்கள் 14மீட்டர் மிதவை ஆழம் கொண்ட இத்தகைய பெரிய கப்பலை கையாளுவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து துறைமுக துறைதலைவர்கள், ஊழியர்கள் குறிப்பாக துறைமுகதுணை பாதுகாவலர் மற்றும் இக்கப்பலை பாதுகாப்பாக துறைமுகத்திற்குள் கொண்டு வந்த துறைமுக பைலட்கள் அனைவரையும் பாராட்டினார்கள்.

மேலும் இவ்வகை அதிக மிதவை ஆழம் கொண்ட கப்பல்களை கையாளுவதினால் துறைமுக உபயோகிப்பாளர்களுக்கு பொருளாதார அளவீடு மேம்படும் வகையில் நிலக்கரி, சுண்ணாம்புக் கல், ராக் பாஸ்பேட் மற்றும் இதர சரக்குகினை கையாளுவதற்கு ஏதுவாக அமையும் என்று கூறினார். மேலும், வ.உ.சிதம்பரனார் துறைமுகம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை விரைவில் செயல்படுத்த உள்ளது என்று கூறினார்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்புஅதிகாரி


ZHENG JUN